**தலைப்பு 126 – கல்வி அமைச்சு- 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கல்வி அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கல்வி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கல்வி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன எனவும்,

.

## 1.6. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதியல்லாச் சொத்துக்கள்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நிதியல்லா சொத்துக்களை கணக்கிலிடும் போது கீழ் காணும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சினால் 2020 வருடம் நிதியல்லா சொத்துக்களை கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதியினை நிதியல்லா சொத்துக்களுக்கான கூற்று மற்றும் வேலைத் திட்டத்தின் படியான கூற்றுக்கிடையில் ரூபா 23,306,870,589 க்கான வேறுபாடு நிலவியது. | பள்ளிக்கூடங்களின் உரிமைத் தன்மை கல்வி அமைச்சுக்கு சொந்தமானதாக இருப்பதனால் தற்போதைக்கு நிதியல்லா சொத்துக்களை மாற்றப்பட்டு இல்லாமை. | கொள்வனவுகளின் பெறுமதிகள் ACA 6 படி மற்றும் ACA 2(i) படி சமமாக இருத்தல் வேண்டியமை |
| (ஆ) | 8 உருப்படிகளின் நிதியல்லா சொத்துக்களை சென்ற ஆண்டின் இறுதி மீதிகள் மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகள் கணக்கிலிடும் போது ரூபா 6,713,956,365 க்கான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டிற்கான சொத்துக்களின் கூட்டு எண்ணிக்கை 2020.01.01 திகதி மீதியுடன் சேர்க்கப்பட்டுள்ளமை. | ஆண்டினுள்ளான சொத்துக்களின் கூட்டு பெறுமதியினை கணக்காய்வுக்காக முன்வைக்கப்பட வேண்டியமை |

### 1.6.2 வருமானமல்லாத பெறுவனவுகள்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக வருமானமல்லாத பெறுவனவுகளை கணக்கிலிடப்படும் போது கீழுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 571 நிதிப் பிரமாணத்திற்கு முரணாக 2 வருடங்களை கடந்துள்ள பொது வருமானத்திற்கு வரவு வைக்கப்படாத 06 வைப்புக் கணக்குகளின் பெறுமதி ரூபா 392,352,040 ஆக இருந்ததுடன் 05 வருடங்கள் கடந்துள்ள ரூபா 15,362,919 அதில் உள்ளடங்கியிருந்தது. | நிலுவைகளை தீர்த்து வைப்பதன் பொருட்டு மாகாண திணைக்களங்கள் மற்றும் கல்வியற் பீடங்களை அறிவுறுத்தப்பட்டுள்ளன. | 571 நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் இரண்டு வருடங்கள் கடந்துள்ள வைப்பு மீதிகள் தொடர்பாக செயற்பட வேண்டியமை. |

### 1.6.3 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தனித்த மீதிகளுக்கான வகைப்படுத்தல் சுருக்கத்தின் கூட்டுத்தொகை மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கின் இறுதி மீதி பல வருடங்களாக இனங்காமல் இருந்ததுடன் மீளாய்வாண்டில் அது ரூபா 26,487,385 வால் இணங்காதிருந்தது. அம்மீதியினை இனங்கண்டு திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | 1977 சம்பளப் பட்டியல்கள் மற்றும் ஏனைய பட்டியல்கள் அழிந்து போனமை மற்றும் வடக்கு கிழக்கிலிருந்து 1990 க்கான கணக்கு இணக்கப்பாட்டு கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாமை இவ் வேறுபாடுகளுக்கு காரணிகளாகும். | இனங்காமையினை இனங்கண்டு திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

**2.** **நிதி மீளாய்வு**

**2.1** **கட்டுநிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட கட்டுநிதிக்கான வரையறை ரூபா 103,695,711,000 ஆக இருந்ததுடன் பெறப்பட்ட மொத்த கட்டுநிதி பெறுமானம் ரூபா 71,256,548,034 ஆக இருந்தமையிால் அங்கீகரிக்கப்பட்ட வரையறையிலிருந்து ரூபா 33,216,716,161 அதாவது 33 சதவீதம் பெறப்படவில்லை. | உடன்படுவதாக | அங்கீகரிக்கப்பட்ட கட்டு நிதி வரையறையினுள் கட்டுநிதி பெற்றுக் கொள்வதற்கு |

**2.2** **செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 6 செலவின விடயங்களுக்கான ரூபா 528,175,050 மூலதன ஒதுக்கீடுகள் முழுமையாக சேமிக்கப்பட்டு இருந்ததுடன் 07 செலவின விடயங்களுக்கான ரூபா 223,170,000 மூலதன ஒதுக்கீடுகளிலிருந்து நூற்றுக்கு 52 முதல் நூற்றுக்கு 86 வரையிலான வீச்சளவில் சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்றினால் வரவு செலவுக்குட்பட்ட ஒதுக்கீடுகுள் சேமிக்கப்பட்டிருந்தமை. | அமைச்சின் குறிக் கோளினை நிறைவேற்றிக் கொள்வதற்கு செயற்படுத்தக் கூடியதான திட்டங்களை வகுப்பதற்கும் திட்டங்களின் படி அவற்றை உபயோகப்படுத்து வதற்கும் செயற்பட வேண்டியமை. |
| (ஆ) உயர்கல்வி பிரிவில் மீண்டெழு மற்றும் 19 செலவின விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 131,643,575 க்கான ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன் | 2020 வருடம் நிலவிய கொவிட் 19 தொற்று நிலமையினால் அலுவலக வேலைகள் முறையான நடைபெறாமை, வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் பாவனையின் போது | அமைச்சின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்ளக்கூடிய வாறு |

| | | |
|---|---|---|
| அது நூற்றுக்கு 30 முதல் நூற்றுக்கு 98 வரையிலான வீச்சில் இருந்துது. | பராமரிப்பு செலவினங்கள் இல்லாது இருந்தமை, அபிவிருத்தி நோக்கினை கொண்ட காரியங்களுக்காக எதிர்பார்த்தபடி செலவினங்கள் செய்யப்படாமை பணிக் குழாமினை வெளிநாட்டு பயணங்கள் மேற்கொள்ளாமை ஆகிய விடயங்கள் ஒதுக்கீடுகள் உபயோகப்படுத்தாமைக்கு காரணிகளாக இருந்தன. | காரியங்களை நடாத்திச் செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

**2.3 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு மீதான இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இணக்கக்கூற்றின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச்சென்ற, ஓய்வு பெற்றுச்சென்ற, விட்டுச் சென்ற, நிறுத்தம் செய்யப்பட்ட, வேலையை விட்டுச் சென்ற மற்றும் ஏனைய உத்தியோகத்தர் களிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 168,315,305 ஆகும். அவற்றில் 5 வருடங்கசுக்கு மேற்பட்டவை 71,453,543 ஆக இருந்ததுடன அம்மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அதிகமான கடன் மீதிகளை தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள கடன் மீதிகள் எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிலுவையில் உள்ள கடன் மீதிகளை முடிவித்துக் கொள்ளவும் மற்றும் அறவிடக் கூடிய மீதிகளை எதிர்காலத்தில் அறவிடப்பட்டு உத்தியோகத்தர் களை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். |

**2.4 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய இலக்கம் 255/2017 கொண்ட பொதுக் கணக்கு சுற்றறிக்கையின் 2(அ) மற்றும் (ஈ) ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வு ஆண்டின் | 2020 வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களில் ரூபா 4,623,823,814 க்கான பொறுப்புக்கள் மற்றும் 4,746,913,047 க்கான இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தமை. | சுற்றறிக்கையின் படி எந்தவொரு பொறுப்பும் அடுத்த ஆண்டினுள் தீர்த்து வைக்கப்படு |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 4,623,823,814 க்கான பொறுப்புக்களும், ரூபா 4,746,913,047 க்கான இணக்கப்பாடுகளும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. | | வதற்கான நோக்கில் முன்னெடுத்துச் செல்ல கூடாதமை. |
| (ஆ) | நிதிக் கூற்றுக்களில் பதியப்பட்டுள்ள பொறுப்புக்கள் அட்டவணைகளின் படி 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகள் தொடர்பாக ரூபா 4,222,967,796 க்கான பொறுப்புக்கள் தீர்த்து வைப்பதற்கு செயற்படாது மீளாய்வாண்டின்து பொறுப்புக்களில் உட்படுத்தப்பட்டிருந்தன. | இதனை சரி செய்வதற்கு கணக்கீட்டுப் பிரிவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக் கான பட்டியல்களை சரியாகப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (இ) | 2020 வருட இறுதியில் காணப்பட்ட ரூபா 289,600 க்கான பொறுப்புக்கள் பொறுப்புக்களுக்கான கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பொறுப்புக்களுக்கான பட்டியலில் பதிவது தவறுதலாக விடுபட்டுப் போய் உள்ளது. எதிர்காலத்தில் அதுபோன்று தவறு ஏற்படாத வண்ணம் செயற்படுவதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட வருடம் தொடர்பாகவுள்ள பொறுப்புக்கள் யாவற்றையும் பொறுப்புக்களுக் கான கூற்றில் பதியப்பட வேண்டியமை. |

## 2.5 சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிக் கணக்காய்வு பரீட்சிப்புக்களில் அவதானமான சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் உடன்படாத சந்தர்ப்பங்கள் கீழ் ஒப்பீடு செய்யப்பட்டு காட்டப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | **சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களின் அவதானம்** | **இணங்காமை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | 1961 இலக்கம் 8 கொண்ட உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சி | 5 வயது முதல் 14 வயதிலான மாணவர்களுக்கு சாதாரண கல்வியினை பெற்றுக் கொடுப்பதற்காக தனியார் துறையினருக்கு | அமைச்சில் பதிவு செய்யப்படாத இப்பாடசாலைகளை ஒழுங்குமுறைப்படுத்தல் , மேற்பார்வை | சட்ட மூலத்திற்கு அமைய செயற்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பாடசாலைகள் (விசேட ஏற்பாடு) சட்ட மூலத்தின் 25 ஆம் பிரிவு | பாடசாலைகள் ஆரம்பிக்க முடியாத போதிலும் அதற்கு முரணாக கம்பனி சட்டத்தின் கீழ் வியாபார ரீதியாக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | செய்தல் மற்றும் அவதானித்தல் ஆகியன அமைச்சுக்கு முடியாது போய் உள்ளமை. | |
| (ஆ) | 1986 இலக்கம் 30 கொண்ட கல்வி வித்தியாசாலை சட்ட மூலம் | | | |
| (i) | 3, 4 மற்றும் 5 பிரிவு | ‘‘சபை’’ எனக் குறிக்கப்படுகின்ற கல்வி வித்தியாசாலைக்கான அதிகாரங்கள், காரியங்கள் மற்றும் செயற்பாடுகள் 18 பொறுப்பளிக்கப்பட்டிருந்தன. அப்படியானதொரு சபை 2008 வருடம் முதல் இவ் அறிக்கையின் திகதி வரையிலும் செயற்பட்டிருந்ததாக சான்றுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. | இலக்கம் ED/03/19/05/02/05 கொண்ட ஆவணக் கோவையில் 2008 வருடத்தின் போதான சபைக் கூட்ட அறிக்கை வித்தியா பீட கிளையில் இருப்பதுடன் ஏனைய பதீவுகள் தொடர்பான ஆவணக் கோப்புக்கள் கண்டுபிடிக்க முடியாது உள்ளமை. | சம்பந்தப்பட்ட பதிவுகளை பாதுகாப்பாப வைத்துக் கொள்ளவும் மற்றும் சட்ட மூலத்தின் படி செயற்படவும் வேண்டியமை. |
| (ii) | 7 ஆம் பிரிவு | சபையின் பிரதாண ஆணையாளரினால் வித்தியாசாலைகளின் நிர்வாக செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், பணிக்குழாமினை கட்டுப்படுத்துதல், மற்றும் அதிகாரங்கள் காரியங்கள் மற்றும் செயற்பாடுகளை செயற்படுத்துவது ஆகியவற்றை மேற்கொள்ளப்பட வேண்டி இருந்த போதிலும் சட்டமூலத்தின் படி சபைகளை அமைப்பதுடன் இக்காரியங்களை செயற்படுத்துவதும் உயரிய முறையில் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவுகள் வழங்குவதற்கான அனுமதியினை பெறப்படாமையினால் வித்தியாசாலைகளுக்கான சபைக் கூட்டங்களை நடாத்த முடியாது உள்ளமை. | சட்ட மூலத்தில் குறிப்பிடப் பட்டுள்ளபடி சம்பந்தப்பட்ட சபைகளை அமைப்பதுடன் அதன் காரியங்களும் மேற்கொள்ளப் பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாண கோவை | | | |
| (i) | இலக்கம் 104(3) மற்றும் 104(4) கொண்ட நிதிப் பிரமாணம் | 39 வாகன விபத்துக்களின் ஆதார பதிவுகளை சமர்ப்பிப்பதற்கு 11 தினங்கள் முதற்கொண்டு 310 நாட்கள் வரையிலும் 36 வாகன விபத்துக்களின் பூரண பதிவுகளை சமர்ப்பிப்பதற்கு 88 நாட்கள் முதற் கொண்டு 3,498 நாட்கள் வரையிலும் தாமதம் ஆக்கப்பட்டமையினால் மூன்று நடவடிக்கை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை தாமதமாகி இருந்தது. அத்துடன் 3 பொருட்கள் களவாடல் மற்றும் சேதங்களுக்கான ஆரம்ப பதிவுகளை சமர்ப்பிப்பதற்கு 2,675 நாட்களும் பூரண பதிவுகளுக்கு 7,869 நாட்களும், தாமதிக்கப்பட்டிருந்தன. | முன் நடவடிக்கை மேற்கொள்வதற்கு செயற்படுவதாக | நிதிப் பிரமாணத்தின் படி தாமதப் படாது தேவைப்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டியமை. |
| (ii) | 571(2) கொண்ட நிதிப் பிரமாணம் | மீளாய்வாண்டு இறுதி தினம் இருந்த ரூபா 26,602,335 க்கான ஒப்பந்த தடுத்து வைப்பு தொகையினை சம்பந்தப்பட்ட நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொது வருமானத்தில் வரவு வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட பரிந்துரைகளை பெற்றுக் கொள்ளப்பட்டு ஒப்பந்த தாரர்களுக்கு செலுத்தல்களை வழங்குவதற்கு அல்லது பொது வருமானத்தில் வரவு வைப்பதற்கு தேவையான நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன. | தாழ்த்தப்பட்ட வைப்புக்கள் தொடர்பான நிதிப் பிரமாணத்தின் படி செயற்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2008 செப்டம்பர் 10 ஆந் திகதிய இலக்கம் 37/2008 கொண்ட கல்வி அமைச்சின் சுற்றறிக்கை | | | |
| (i) | 2.1 பந்தி | 2 ஆந் தரம் முதல் 5 ஆந் தரம் வரையிலான வகுப்புக்களின் மாணவர் எண்ணிக்கை முதலாந் தரத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் போது அவ் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆகக்கூடிய மாணவர் எண்ணிக்கைக்கு வரையறுக்க வேண்டி இருந்த போதிலும் கண்டி மஹாமாயா பெண்கள் பாடசாலையில் மேற்படி தரங்களிலான 09 வகுப்புக்களில் உரிய வரையறையினை விஞ்சப்பட்டிருந்த மாணவர் எண்ணிக்கை 03 முதல் 04 வரையிலாக இருந்தன. மேலும் 6 ஆந் தரம் முதல் 11 ஆந் தரம் வரையிலான ஒரு வகுப்பில் மாணவர் எண்ணிக்கை 45 க்கு வரையறுக்கும் படி வேண்டி இருந்த போதிலும் 08 வகுப்புக்களில் அவ்வரையறையினை விஞ்சப்பட்டு 05 முதல் 16 வரையிலான மாணவர் எண்ணிக்கையினை சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் படி செயற்பட வேண்டியமை. |
| (ii) | 3.1, 3.2, 3.3 மற்றும் 3.4 பந்திகள் | 2 ஆந் தரம் முதல் 11 ஆந் தரம் வரை வெற்றிடங்கள் நிலவும் வகுப்புக்களில் மாணவர்களை சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான சுற்றறிக்கை ஏற்பாடுகளை பின்பற்றப்படாமல் கல்வி அமைச்சின் செயலாளரின் கடிதங்கள் மூலமான அறிவுறுத்தல்களின் படி 2019 மற்றும் 2020 வருடங்களினுள் கண்டி மஹாமாயா பெண்கள் பாடசாலையில் 2 ஆந் தரம் | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முதல் 4 ஆந் தரம் வரை மாணவர்களை சேர்த்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் 21 ஆக இருந்தது. | | |
| (உ) | 2009 நவம்பர் 17 ஆந் திகதிய இலக்கம் 2009/35 கொண்ட கல்வி அமைச்சின் சுற்றறிக்கை | | | |
| (i) | 3 ஆம் பந்தி | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளினால் சம்பந்தப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் மற்றும் ஏற்பாடுகளை கடைக்கப்பிடிக்கப்படுகின்றனவா என்பதனை தேடிப் பார்ப்பதற்காக முறையான மற்றும் தொடர் ஒழுங்குபடுத்தல் முறைமையினை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பாக அறிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | - மேற்படி - |
| (ii) | 4(அ)(i) பந்தி | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு தனியார் பாடசாலைகளிலும் கற்றல் கற்பித்தலுக்கான தொடர் செயற்பாட்டினை முறையாக நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு வருடத்திற்காகவும் நேர அட்டவணை தயாரிக்கப்பட்டு அதற்கு முன்னைய ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னதாக வலய, மாகாண அல்லது தனியார் பாடசாலை பணிப்பாளரின் அனுமதியினை பெற்றுக் கொள்ள வேண்டி இருந்த போதிலும் அதகமான பாடசாலைகளினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | இதுவரையிலும் இது பற்றிய கவனம் செலுத்தப்படவில்லை. எதிர்காலத்தில் கவனம் செலுத்துவிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2016 சனவரி 07 ஆந் திகதிய இலக்கம் 01/2016 கொண்ட கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் 7.3 ஆம் பந்தி | மாகாண கல்விப் பணிப்பாளரினால் மாகாண பாடசாலைகளுக்கு தேவைப்படும் கல்விசார் பணிக் குழாமிற்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்திடமிருந்து அனுமதியினை பெற்றுக் கொள்ளாமையின் காரணமாக மாகாண கல்வி ஆசிரியர்களுக்கான வெற்றிட அட்டவணையின் படி முறைசாரா மற்றும் விசேட கல்வி பிரிவுகளில் 651 ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவின. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். உண்மையில் விசேட கல்வி ஆசிரியர் 21 பேர் 2021.02.15 ஆந் திகதி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் பிரகாரம் தற்போது 676 வெற்றிடங்கள் நிலவுகின்றன. | - மேற்படி - |
| (எ) | 2020 திசெம்பர் 03 ஆந் திகதிய இலக்கம் 37/2020 கொண்ட கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் மற்றும் கோவையின் 12 ஆம் அத்தியாயம் | விசேட கல்வித் துறையில் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் அத்துறையில் முழு நேர சேவையில் ஈடுபடுதல் வேண்டும். ஆயினும், கணக்காய்வினைக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி நாட்டில் விசேட கல்வி துறையில் ஆசிரியர் நியமனம் பெற்றிருந்த 207 ஆசிரியர்கள் அத்துறையில் சேவையில் ஈடுபடாமையினை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் விசேட துறையில் ஈடுபடுத்துவதற்கான அறிவுறுத்தல் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளமை. | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்வி அமைச்சின் பொறுப்புக்களின் படி சர்வதேச போட்டா போட்டிக்கு தன்னம்பிக்கையுடனும் சாத்தியபடும் படியான | விடையளிக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கையில் கல்விக்கான மாற்றமற்ற தேசிய கொள்கையினை நிகழ்காலத்திற்குகந்தவாறு |

| | | | |
|---|---|---|---|
| | நம்பிக்கையான தேசிய கல்வி முறைமையினை நிர்மாணிப்பதற்கான காரியத்தினை முழுமையாக நிறைவேற்றுவதற்கு முடியாது போய் உள்ளது. | | தயாரிக்கப் படல் வேண்டியமை. |
| (ஆ) | 1991 ஏப்பிரல் 19 ஆந் திகதிய 1991 இலக்கம் 19 கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழு சட்ட மூலத்தின் ஏற்பாட்டின் படி தேசிய கல்விகொள்கைகளை தயாரிப்பதற்காக தேசிய கல்வி ஆணைக்குழுவினால் 1992, 2003 மற்றும் 2016 ஆம் வருடங்களில் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் வருட இறுதி வரையிலும் தேசிய கல்வி கொள்கையினை தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. | தேசிய கல்விக் கொள்கையினை தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (இ) | 13 ஆவது அரசியல் யாப்பு திருத்தத்தின் III ஆம் பிற்சேர்க்கையில் கல்வி சார்பாக 2 ஆவது உறுப்புரையின் படி முன் பள்ளிக்கூடங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் முகாமைத்துவப்படுத்தும் உரிமையினை கல்வி அமைச்சுக்கு கையளிக்கப்பட்டிருத்ததுடன் கல்வி அமைச்சின் பிரதான செயுற்றுபுர்டுர்கு இனுஞ்குர்ணுப்புடுடுள்ள முன்பள்ளிக்கூடங்களுக்கான தேசிய கொள்கையினை தயாரித்து செயற்படுத்துவதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. | முன்பள்ளிக்கூடங் களுக்காக தேசிய கொள்கை ஒன்றினை வகுத்து செயற்படுத்த வேண்டியமை. |

**3.2 திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்**

-----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) க.பொ.த (சாதாரண தர) மற்றும் க.பொ.த (உயர்தர) வகுப்புக்களில ் தொழில்நுட்பப் பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர் பற்றாக்குறையினை குறைப்பது, தொழில் நுட்பப்பாடத்தினை பயிலும் மாணவர்களுக்கு ஆசிரியர் தொழில்நுடபப் பெறுநர்களாக உயர் கல்வியினை பெறுவதற்கு வாய்ப்பினை வழங்குதல், தொழில்நுட்ப பாடத்தினை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தங்களின் தொழிற்துறை அபிவிருத்திக்காக தொழில்நுட்ப பாடம் தொடர்பான அடிப்படையாகக் கொண்டு தேசிய கல்வியியற் கல்லூரியினை நிர்மாணிக்கும் கொருட்டு 2017 சனவரி 18 ஆந் திகதிய இலக்கம் அமப/16/2647/742/036-1 கொண்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்கப்பட்டது. 2017 ஏப்பிரல் 19 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2017 இலக்கம் 93 கொண்ட ஆணையில் குறித்துள்ள விளம்பரத்தின் மூலம் சம்பந்தப்பட்ட நிர்மாணத்திற்காக குலியாப்பிட்டி மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட நாரங்கொல்ல பகுதியில் உள்ள காணியின் உரிமையினை கல்வி செயலாளரினால் கைற்றேல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டது. | தொழில்நுட்பவியல் தேசிய கல்வியற் கல்லூரியினை நிர்மாணிப்பதற்காக முற்கொள்ளும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | அமைச்சரவை தீர்மானத்தின் படி தேசிய கல்வியியற் கல்லூரியினை நிர்மாணிப்பதற் கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொறிய அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்ட இத்திட்டத்திற்காக 2019 மற்றும் 2020 வருடங்களினுள் அடிக்கல் நட்டுதல் உட்பட்ட செலவினங்களுக்காக அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் திட்டத்தின் மூலமாக ரூபா. 15,366,316 க்கான தொகையினை செலவிடப்பட்டு இருந்த போதிலும் திட்டத்தின் வேலைகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன. | | |
| (ஆ) | கராப்பிட்டிய வைத்தியசாலையில் பேராசியர் பிரிவொன்றினை அமைப்பதற்கான திட்டத்தினை ரூபா. 1300 மில்லியன் கிரய மதிப்பீட்டுடன் 2018 வருடம் ஆரம்பிக்கப்பட்டு 2022 மே 31 ஆந் திகதி முடிக்கப்பட வேண்டியிருந்தது. 2019 வருடம் விலைமனுக்கோரலினை மேற்கொள்ளப்பட்டு ரூபா.131.7 மில்லியனிற்கான முற்பணக் தொகையினையும் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியாகும் போது அமைப்பு வேலைகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | நிர்மாணப் பணியினை மேற்கொள்வதற்கு உத்தேச காணியினை சுகாதார அமைச்சிடமிருந்து கையேற்கப்பட வேண்டியிருந்தமையினால் அக்காரியத்தினை 2019 ஒக்டோபர் 28 ஆந் திகதி ஆகும் போது முடிக்கக்கூடியதாக இருந்தது. திட்டத்தின் பணியினை ஆரம்பிக்கம் பொருட்டு 2019 திசெம்பர் 17 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்கு வேலைத்தளத்தினை ஒப்படைக்கப்பட்டதுடன் 2020 வருடம் முதலில் பூமியினை ஒழுங்குப்படுத்தும் வேலைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதுடன் 2021 யூலை ஆகுகையில் கிட்டத்தடட நூற்றுக்கு 20 க்கான பௌதீக ரீதியிலான முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது. | உரிய கால எல்லைக்குள் திட்ட வேலைகள் பூர்த்தி செய்து கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | 2018 வருட வரவு செலவு திட்டத்தின் கீழ் ரூபா 943 மில்லியுனு், மதிப்பீட்டில் றுகுணு பல்கலைக்கழகத்தில் கப்பற்துறைக்கான கற்றல் மற்றும் கப்பற்துறை விவகாரத்திற்கான | ஹபுகல மற்றும் மாகொல்ல ஆகிய இரு இடங்களிலும் செயற்படும் இத்திட்டத்தில் 04 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தினை நிர்மாணிக்கப்படும் மாகொல்ல | நிர்மாணப் பணித்திட்டங்கள் தாமதமின்றி முடிக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

பிரிவொன்றினை அமைப்பது தொடர்பான திட்ட வேலையினை 36 மாதங்களில் முடிக்கப்பட வேண்டியிருந்தது. ஆயினும், திட்டம் தொடர்பான ஆதார நடவடிக்கை மாத்திரம் 2019 வருடம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அத்துடன் மீளாய்வாண்டு இறுதியாகும் போது ரூபா. 146.9 ஒதுக்கீடு வகுத்துக் கொடுக்கப்பட்டிருந்த போதும் அதில் ரூபா. 90.9 மில்லியன் செலவிடப்பட்டு கட்டமைப்பு வேலைகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பௌதீக ரீதியிலான முன்னேற்றம் நூற்றுக்கு 29 படியான கீழ் மட்டத்தில் இருந்தது.

வேலைத்தளத்தினை ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைப்பதில் தாமதம் ஏற்பட்டது 2019 வருடம் ரூபா. 146.9 மில்லியன் ஒதுக்கீடு வகுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ஹபுகல பூமியில் ஆரம்ப நிர்மாணப் பணிகளுக்கு மாத்திரம் ரூபா. 90.9 மில்லியன் செலவிடப்படக்கூடியதாக இருந்தது. மாகொல்ல காணியில் நிர்மாணிக்கப்படும் 04 மாடிகள் கொண்ட கட்டிடப் பணியில் நூற்றுக்கு 55 (2021 யூன் அளவில்) பௌதீக ரீதியிலான முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது.

(ஈ) மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 1180 மில்லியன் பெறுமதி வாய்ந்த றுகுணு பல்கலைக்கழக 12 மாடிகளைக் கொண்ட வைத்திய பீட கட்டடத்தினை நிரடமாணிப்பபதற்கு திட்டம் 2018 முதல் காலாண்டினுள் ஆரம்பிக்கப்பட்டு 2020 சனவரி 10 ஆம் திகதி அளவில் முடிக்கப்பட வேண்டி இருந்ததுடன் அதற்கான பணியினை ஆரம்பிக்கும் பொருட்டு முற்பணமாக 2018 சனவரி 17 ஆந் திகதி ரூபா 195.5 மில்லியன் ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்டது. அத் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதில் காணப்பட்ட மந்த முன்னேற்றம் காரணமாக 2019 திசெம்பர் 23 ஆந் திகதி ஒப்பந்தத்தினை இரத்துச் செய்யப்பட்டு அமைச்சரையின் அனுமதியுடன் வேறொரு நிர்மாண நிறுவனத்திடம் மீண்டும் நிர்மாண

இத்திடடம் 2020 சனவரி 10 ஆந் திகதியளவில் முடிக்கப்பட வேண்டியிடிருந்த போதிலும் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்லும் மந்த முன்னேற்றத்தின் பயனாக 2019 திசெம்பர் 23 ஆந் திகதியன்று ஒப்பந்தத்தினை இரத்து செய்யப்பட்டு 2020.05.06 திகதி பொறியியல் செயற்பா டுகளுக்கான மத்திய ஆலோசனைப் பணியகத்திடம் ஒப்பந்தத்தினை வழங்கப்பட்டது. முற்பண காப்புறுதியினை பணமாக்கும் படியாக 2019.12.30 ஆம் திகதி இலங்கை வங்கியிடம் அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த முற்பண பிணைப்பத்திரம் மற்றும் செயலாற்றல் பிணைப்பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கு எதிராக இடைக்கால தடை உத்தரவினை கொழும்பு வர்த்தக நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தத்தினை இரத்துச் செய்ததின் காரணமாக ஒப்பந்தக்காரரிடமிருந்து மேற்கொண்டும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 155.3 மில்லியனிற்கான பணியினை ஆரம்பிப்பதற்கான முற்பண மீதியினை சம்பந்தப்பட்ட வங்கி காப்புறுதியினை பணமாக மாற்றும் படி வங்கிக்கு அறிவுறுத்துவதற்கு தாமதமானதன் காரணமாக மீளப்பெறும் வாய்ப்பினையும் தவறவிட்டது. | அதன்படி பல்கலைக்கழகத்கினால் விடுக்கப்பட்ட கோரிகையினை நிறைவேற்ற முடியாதுள்ளதாக இலங்கை வங்கியினால் 2020 சனவரி 16 ஆம் திகதி அறிவுறுத்தப்பட்டிரந்தது. இது தொடர்பாக றுகுணு பல்கலைக்கழகத்தினால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கமைய 2020.06.10 திகதி வர்த்தக நீதிமன்றத்தில் எதிர் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | |
| (உ) | இலங்கை அரசு மற்றும் குவைட் அரசின் உதவியுடன் சுனாமியினால் விபத்துக்குள்ளான மாகாணங்களில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களை பழுது பார்த்தல் மற்றும் மீள் நிர்மாணித்தலுக்கான திட்டம் 2019 வருடம் திசெம்பர் மாதம் முடிவுற இருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்திற்கு நீடிக்கப்பட்டிருந்ததது. இத் திட்டத்திற்கு மீளாய்வு ஆண்டிற்காக ரூபா. 93.20 மில்லியனிற்கான ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிருந்ததுபோதிலும் திட்டத்திற்காக பாவனை செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 57.3 மில்லியன் மாத்திரம் ஆனதுடன் அது வரையிலான திடடத்தின் பௌதீக ரீதியான முன்னேற்றம் நூற்றுக்கு 65 க்கான கீழ் மட்டத்தில் இருந்தது. | தற்போதுள்ள கொவிட் தொற்றுநிலை திட்டங்காரணமாக திடட வேலைகளை செவ்வனே செயற்படுத்துவதற்கு பற்பல இடர்பாடுகள் ஏற்பட்டதனால் திட்டத்திற்கான கால எல்லை முடிவடைய இருந்த 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு சம்பந்தப்பட்ட திட்டத்தினை முழுமையாக செய்து முடிப்பதற்கு இயலாது போனாதும் ரூபா. மில்லியன் 57.35 செலவினப் பதிவு செய்யக்கூடியதாக இருந்தது. | திட்டங்களை உரிய காலத்தில் முடிப்பதற்கு முகாமைத்துவ த்தின் கவனத்தினை செலுத்தப்படல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை அரசின் மற்றும் சவுதி அரசின் உதவியின் கீழ் செயற்படும் வடமேல் பல்கலைக்கழகம் நகர | 2020 ஆம் வருடம் தவிர்க்க முடியாத காரணங்களினால் 10 மாதங்கள் தாமதப்பட்டதுடன் அத்துடன் | ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன் திட்டம் தொடர்பாக |

| | | |
|---|---|---|
| அபிவிருத்தி திட்டம் 2017 ஓகஸ்ட் ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வு ஆண்டு முடிவடையும் போது சுமார் 31/2 வருடக்காலம் கழிந்து விட்ட போதிலும் ரூபா. 11 மில்லியன் பாவனை செய்யப்பட்டு அடையப் பெற்றுள்ள பௌதீக ரீதியிலான முன்னேற்றம் நூற்றுக்கு 5 ஆன கீழ் மட்டத்தில் இருந்தது. | அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கும் சிறிது காலம் சென்றது. இவ்வேலைகள் 2020 ஆம் வருடம் முற்பகுதியில் நிறைவேற்றப்பட்டதுடன் அதன் பிறகு கொரோனா தொற்று நிலைமை காரணமாக மேலும், வேலைகள் தாமதமாயின. தற்போது கட்டிட நிர்மாணப் பணிகளுக்காக ஒப்பந்தக்காரர்களை தெரிவுசெய்வதற்காக அமைச்சவையின் அனுமதியினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | சாத்தியக் கற்றலினை மேற்கொண்டு திட்டத்தினை செயற்படத்தும் ஆற்றலினை உறுதி செய்ததன் பின்னர் திட்டத்தினை ஆரம்பிக்கப்பட்டு அதற்கான குறிக்கோள் மற்றும் நோக்கினை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக திட்டங்களை துரிதமாக செய்த முடிப்பதற்காக கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

### 3.3 ஏனைய அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 செப்தெம்பர் 24 திகதிய அமைச்சரவைக் கூட்டத்தின் இலக்கம் அமப/08/1742/316/086 கொண்ட அமைச்சரவின் தீர்மானப்படி இலங்கை யூனெஸ்கோ தேசிய ஆணைக்குழுவினை அமைக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான வரைவு சட்ட மூலத்தினை 2008 ஒக்டோபர் 29 ஆந் திகதி சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு சசமர்ப்பிக்கப்பட்டிருந்தபோதிலும், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் கூட சட்ட மூலத்தின் செயற்பாடுகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | இக்காரியத்தினை துரிதப்படுத்துவதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்திடம் எழுத்து மூல வேண்டுகோள் விடப்பட்டுள்ளமை. | சட்ட வரைவினைக்கான பரிந்துரையினை சட்ட வரைஞர் திணைக்களத்திடமிருந்து துரிதமாக பெற்றுக்கொள்ள வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை யூனெஸ்கோ ஆணைக்குழுவின் பணிக்குழாமினை நியமித்தல் மற்றும் பணம் செலுத்தல் இச்சட்ட மூலத்தின் படி மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் சட்டமூலம் அங்கீகாரத்தினை பெறப்படாது இருக்கையில் 2008 செபதெம்பர் மாதம் 24 ஆந் திகதிய இலக்கம் அம்ப/08/1742/316/086 கொண்ட அமைச்சரவை அனுமதியுடன் ஆணைக்குழுவிற்கு பணிக்குழாமினை றியமிக்கப்பட்டு பணம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் பிரான்ஸிழுள்ள பாரிய நகரில் அமைந்துள்ள யூனெஸ்கோ நிரந்தர பிரதிநிதி அலுவலகத்தில் இணைப்பாளர் ஒருவர் இணைக்கப்பட்டு மீளாய்வாண்டு இறுதி வரை மொத்தம் ரூபா. 45.85 மில்லியனுக்கான ஒதுக்கீடு கல்வி அமைச்சினால் வெளிவிவகார அமைச்சுக்கு விடுக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு பரீட்சிப்புடன் உடன்படுகிறேன். | சட்ட மூலத்தினை நிறைவேற்றப்பட்டு அதனுள் உள்ளவாறு செயற்பட வேண்டியமை. |
| (இ) | அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களின் தாபன மற்றும் பாட மீளாய்வ செயற்பாடுகளின் பயன்பாட்டுக்காக 2013 வருடம் முதல் 2018 ஆம் வுருடம் வரையிலான கால எல்லையஜனுள் அந்நிறுவனங்களினால் வைப்புச் செய்யப்பட்ட ரூபா. 5,200,000 அது தொடர்பான குறிக்கோளிற்காக பயன்படுத்தப்படாது வீணாக உள்ளது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பினையும் கவனத்திற்கொண்டு அவ்வாறு அறவிடப்படும் நிதியத்தினை பொது வருமானத்தில் வரவு வைக்கவும், அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களின் மீளாய்வு செயற்பாடடுகளுக்கான செலவினங்களை மேற்கொள்வதற்கும் ஒரு செலவின விடயத்தின் கீழ் வரவு செலவு மதிப்பீட்டின் மூலமாக வருடாந்த | வைப்பிலிடப் பட்டிருக்கும் நிதியினை சம்பந்தப்பட்ட குறிக்கோளினை நிறைவேற்று வதற்காக பயன்படுத்தப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| | ஒதுக்கீட்டினை வகுத்துக்கொள்வதற்கு தேவையான ஆலோசனை யினைப் பெற்றுத் தரும்படி திறைசேரியிடம் விசாரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |

**3.4 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய கல்வியல் கல்லூரி மற்றும் ஆசிரியர் மத்திய நிலையங்களுக்கு செயற்பாட்டறை உபகரணங்கள் வழங்குவதற்காக வழங்குநருடன் செய்து கொள்ளப்படடஒப்பந்தத்தின் படி 2020 மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னர் உபகரணங்களை சம்பந்தப்பட்ட ஆசிரியர் மத்திய நிலையங்கள் மற்றும் தேசிய கல்வியல் கல்லூரிகளுக்கு வழங்கி முடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் வழங்குதல் பொருட்களை வழங்குவதற்கு 20 கிழமைக்கும் மேல் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. ஆயினும் ஒப்பந்த பெறுமதியில் நூற்றுக்கு 10 க்கான தாமதக்கட்டணமானது ரூபா. 3,844,872 தொகையினை அறவிடப்படாது வழங்குநர்க்கு பணம் செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தின் படி வழங்குனரால் 2020.03.10. ஆம் திகதிக்கு முன்னர் பொருட்கள் வழங்கப்பட வேண்டி இருந்த போதிலும் பொருட்கள் வழங்கவதனை 2020.09.23 ஆந் திகதி முடிக்கப்பட்டிருந்ததனை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | ஒப்பந்தத்தின் படி தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டியமை. |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு சொந்தமான 11 வாகனங்கள் மைச்சின் பாவனைக்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த | கையேற்பதற்கு மற்றும் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அமைச்சினால் பாவனை மேற்கொள்ளப் படுகின்ற வேறு நிலையங்களுக்கு சொந்தமான வாகனங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | துடன் அமைச்சுக்கு சொந்தமான 22 வாகனங்கள் வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. மோட்டார் வாகன பதிவு சான்றிதழின் அசல் பிரதியின்றி அமைச்சினால் பாவனை மேற்கொள்ளப்படும் 11 வாகனங்களை கையேற்றுக்கொள்வதற்கு அல்லது சட்ட ரீதியான உரிமையினையுள்ள நிலையங்களிடம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | | மற்றும் வேறு நிறுவனங்கள் பாவனை செய்கின்ற மைச்சின் வாகனங்கள் சட்டரீதியாக தையேற்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சுக்கு சொந்தமானதாக இருந்த நிதியல்லா சொத்துக்களுள் 40 வாகனங்கள் இராஜாங்க அமைச்சிடம் தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டு இருந்த போதிலும் இராஜாங்க அமைச்சிடம் பெற்றுக்கொடுப்பதற்கு உத்தேசித்துள்ள ஏனைய நிதியல்லாத சொத்துக்கள் மேன்மேலும் இனங்கண்டு கொண்டு இருப்பதனால் அச்சொத்துக்கள் கணக்காய்வு தினத்தின் போது கூட ஒப்படைக்கப் பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை ஒப்படைப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | கல்வி அமைச்சினால் இராஜாங்க அமைச்சிடம் பெற்றுக்கொடுக்கப் பட்ட சொத்துக்களை ஒப்படைக்கப்படல் வேண்டும். |

### 3.6 இழப்புக்களும் நட்டங்களும்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 109 பிரகாரம் சகல இழப்புக்களும் தள்ளுபடிகளும் | எதிர்காலத்தில் இது பற்றி பதிவுகளை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்களை | சகல இழப்புக்கள் மற்றும் தள்ளுபடிகள் நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா. 3,034,778 பெறுமதியான 33 விபத்துக்கள் தொடர்பாக நேர்ந்த இழப்புக்கள் மற்றும் தள்ளுபடிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அறிவுறுத்தப்பட்டுள்ளமை. | காட்டப்பட வேண்டியமை. |
| (ஆ) | 2011 வருடம் முதல் 2019 வருடம் வரையிலும் 8 வருடங்கள் நேர்ந்துள்ள ரூபா 4,742,030 க்கான இழப்புக்கள் மற்றும் தள்ளுபடிகள் 40 சந்தர்ப்பங்களில் ஆரம்பத்தில் தள்ளுபடி செய்யப்படாத மீதியின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது பற்றி பதிவுகளை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்களை அறிவுறுத்தப்பட்டுள்ளமை. | இழப்புக்கள் மற்றும் தள்ளுபடிகள் நடத்த வருடத்தில் நிதிக்கூற்றுக்களில் பதியப்பட வேண்டியமை. |

**3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய கல்வியியல் கல்லூரிஜகளின் பாவனைக்காக டொயோட்டா ஹய்லெக்ஸ் வகையிலான 20 டபல் கெப் வாகனங்கள் 2017 திசெம்பர் 11 ஆந் திகதி வாடகை அடிப்படையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிரந்தது டன் அத்திகதி முதல் 2020 நவம்பர் 24 வரையில் ரூபா 137,219,886 தொகையினை வாடகையாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் வாடகை ஒப்பந்தத்தின் படி அவ்வாகனங்கள் மாதாந்தம் செலுத்தப்பட வேண்டிய கிலொமீட்டர் 3000 திற்கான ஆகக் குறைந்தபட்ச கிலோமீட்டர் அளவினையாவது | வாகனங்கள் மாதாந்தம் செலுத்தப்பட வேண்டிய குறைந்த பட்ச கிவோமீட்டர் அளவினை செலத்தப்படாதிருந்த போதிலும் குறிப்பிடத்தக்க அளவு செலுத்தப்பட்டிருந்தமை. | நிலையத்திற்கு இலாபம் ஏற்படும் வண்ணம் வாடகை ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2017,2018 மற்றும் 2019 ஆம் வருடங்களின் போது அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களுக்காக எரிபொருள், பழுது பார்த்தல் மற்றும் சாரதி மேலதிக கொடுப்பனவு உட்பட ஒர வாகனத்திற்காக நிகர வருடாந்த செலவு முறையே ரூபா. 639,480, ரூபா 703,045 மற்றும் ரூபா 625,770 ஆகும். வாடகை அடிப்படையில் இரண்டு சந்தர்ப்பங்களில் 07 வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த துடன் ஒரு வாகனத்தின் வருடாந்த செலவு ரூபா 5,844,300 ஆக இருந்தது. ஏனைய 06 வாகனங்களுக்குக் ஒரு வாகனத்தின் வருடாந்த செலவு ரூபா 2,649,600 ஆக இருந்தது. ஒரு வாகனத்தின் வாடகைச் செலவு அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களின் பராமரிப்பு கிரயத்தின் அளவினை போன்று நூற்றுக்கு 400 மடங்காக இருந்ததுடன் வாடகை அடிப்டையில் வாகனங்ளை பெற்றுக்கொள்ளல் பொருளாதார ரீதியில் உற்பத்தித் திறன் மிக்க கொடுக்கல் வாங்கலாக கணக்காய்வின் போத அவதானத்திற்குட்பட வில்லை. | தேசிய வரவு செலவு சுற்றறிக்கை 1/2016 படி வாகனங்கள் கொள்வனவு செய்யாது வாடகை அடிப்படையின் கீழ் வாகனங்கள் பெற்றுக்கொள்வதற்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருந்தமை. | வாகன பாவனையினை பொருளாதார ரீதியில் பயனுள்ள வகையில் மேற்கொள்ளப்படி வேண்டிமை. |

## 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய கல்வியியல் கல்லூரி முறைமையில் பொருண்மையான மற்றும் | பல்கலைக்கழக பட்டப்படிப்பு வரை உயர்த்தப்படுவதற்கான முன்மொழிதலினை | வழிகாட்டலினைக் கான கல்வியியற் கோவை |

| | | | |
|---|---|---|---|
| | நற்பண்யியல் அபிவிரத்தியின் பொருட்டு தீர்மானம் மேற்கொள்ளல், திட்டமிடல் மற்றும் நிதி மகாமைத்துவம் ஆகியவற்றின் போத கல்வியியற் கல்லூரிகளின் வெளிப்படைத்தன்மையடன் கூடிய வினைததிடனுடன் மற்றும் சரியாகவும் நடைமுறைதன்மையுடனும செயற்படுவதன் மூலம் வளங்களை பாவனை செய்வதில் உயர் மட்ட பூரண தன்மைக்காகவும் முறையான வழிகாட்ட லினைக்காக கல்வியியற் கோவையொன்று வெளியிட வேண்டியுள்ள போதிலும் 2020 வருடத்தில் கூட முறையான சட்ட ரீதியான கல்வியியற் கோவையினை கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டிருக்க வில்லை. | சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமையினால் வரைவு கல்வியியற் கோவை மாற்றத்திற்கு உட்படவாம் என எதிர்பார்க்கப்படுகின்றமையினால் அவ்வரைவு கல்வியியற் கொவையினை முடிக்கப்படாது உள்ளது. | வெளியிடப்பட வேண்டியமை. |
| (ஆ) | ஆசிரிய தொழில அபிவிருத்தி மத்திய நிலையதங்களுக்கு தொலைபேசி வசதிகள் மற்றும் இணைய வசதிகள் இல்லாமை, விரிவுரையாளர் மற்றும் வளவாளரில்லாமை, தொழல் நுட்ப அறிவினை இல்லாமை, செலவினங்களை மீள் நிரப்பல் தாமதமாதல் தொடர்பாக எதுவித உணர்தலும் இல்லாது அம்மத்திய நிலையங்களில் பயிற்சி வேலைத்திட்டங்களை மெய் நிகர் முறையில் மேற்கொள்வதற்காக ஆலோசனை பெற்றுக் கொடுத்தல் போன்ற விடயங்கள் காரணமாக பயிற்சிகளக்கான செயற்பாடுகள் சாத்தியமற்று போய் இருந்த போதிலும் அம் மத்திய நிலையங்களில் நிலவும் பிரச்சினைகளுக்கு அமைச்சினால் தீர்வினை வழங்கப்பட்டிருக்கவில்லை. | பொத நிதிக் திணைக்களத்தின் ஆனுமதியினை பெற்றுக்கொள்ளப்பட்டு தேவையான வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஆசிரியத் தொழில் அபிவிருத்தி மத்திய நிலையங்களில் நிலவம் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கான ஆலோசனை பெற்றுக்கொடுக்கப் பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆசிரிய மாணவர்களை பயிற்றுவிப்பதற்காக 19 கல்வியியற் கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக வருடாந்தம் ரூபா 2,500 மில்லியன் அதிகப்படியான தொகையினை திரட்டிய நிதியத்திலிருந்து செலவிடப்படுகிறது. ஆயினும் கலிவியியல் கல்லூரிகளுக்கு வருடாந்தம் மாணவர்களை உட்படுத்தும் போத க.பொ.த (உயர்தர) பரீட்சையினை நடாத்தப்பட்டு சுமார் 3 வருடங்கள் கழிந்துள்ளதுடன் 2018 மற்றும் 2019 நடாத்தப்பட்ட பரீட்சைகளிலிருந்து இவ்அறிக்கையின் திகதி வரை மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிரக்க வில்லை. | Z புள்ளியினை தீர்மானிப்பதில் ஏற்படும் சிக்கலான நிலைமை காரணமாக நீதிமன்ற நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்த நேர்வதால் மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் கால வீச்சில் மாற்றம் ஏற்படுகின்றமை. | தாமதிக்கப்படாது ஆசிரிய மாணவர்களை கல்லூரிகளில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |
| (ஈ) | தென் மாகாண முலடியன வலய கல்விக் காரியாலயத்தைச் சேர்ந்த இரு ஆசிரியர்களின் ஒழுக்காற்று பரீட்சிப்பு காரணமாக ஒய்வூதிய பணிக்கொடை ரூபா. 453.642 மற்றும் ரூபா 321,390, 2014 வருடம் முதற்கொண்டு தங்க வைக்கப்பட்ழுடு இருந்ததுடன் 06 வருடங்கள் முடிந்திருந்த பொதிலும் ஒழுக்காற்று பரீட்சிப்பினை முடிக்கப்பட்டு தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பரீட்சிப்பு முடிவுற்ற உடன் மீதித் தொகையினை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஒழுக்காற்று பரீட்சிப்பினை முடிக்கப்பட்டு துரித தீர்வினை வழங்கப்பட வேண்டியமை. |
| (உ) | மேல், வட மத்திய மற்றும் சபரகாமம் மாகாணங்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்ட மாணவர்களுக்கான உதவித் | மீதிப் பணத்தினை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தங்க வைக்கப் பட்டிருக்கும் மாணவர் உதவிப் பணத்தினை தீர்த்து |

| | | | |
|---|---|---|---|
| | தொகை முறையே ரூபா. 80,000, ரூபா 248,777 மற்றும் ரூபா 23,500 என கணக்கு இலக்கங்களில் ஏற்பட்ட தவறுதல் காரணமாக திருப்பி அனுப்பப்பட்டு 2 வருடங்களுக்கு மேல் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. அதற்கான காரணத்தினை அறியப்பட்டு தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | வைக்கப்பட வேண்டும். |
| (ஊ) | ஊவா மாகாண தேசிய கல்வியற்கல்லூரி பண்டாரவளைபொது வைப்பு கால பகுப்பாய்வு அறிக்கையின் படி 2012 வருடம் முதல் 2015 வருடம் வரை வைப்பிலிடப்பட்டிருந்த ரூபா 540,500 தொகையில் தீர்க்கப்படாத ரூபா 128,900 இருந்தது. டிப்ளோமா பட்டமளிப்பினை நடாத்தப்படும் வரை பிணை வைப்பினை தீர்த்து வைக்கமுடியாது போனமையின் காரணமாக 05 வருடங்களுக்கு மேலாக கிணை வைப்புத் தொகையினை வைக்கப்பட்டு இருந்த போதும் மாணவர் ஒரு சாராருக்கு வைப்புப் பணத்தினை தீர்க்கப்பட்டும் இன்னோரு சாராருக்கு தீர்க்கப்படாமலும் இருந்தமைக்கான காரணம் கணக்காய்வின் போது தெளிவாக இருக்கவில்லை. | அம்மீதியினை தீர்த்து வைப்பதற்காக துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வைப்பு மீதியினை தாமதமின்றி தீர்த்து வைக்கப்பட வேண்டியமை. |

## 04. பேண்தகு அபிவிருத்தியின் குறிக்கோள்களினை இனங்கண்டு கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பேண்தகு அபிவிருத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் 2030 வருட நிகழ்ச்சி நிரலினை தேசிய கல்வி ஆணைக்குழு அறிந்திருந்த போதும் அதன் செயற்பாடுகளுடன் தொடர்புடை பேண்தகு அபிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்கு கொள்வதற்கான வேலைத்திட்டங்களுள் உட்புகுத்தப்பட்டு அவ்இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய சந்திப்பிடங்கள், இலக்குகள் ஊடாக அடைவதனை அளந்து பார்ப்பதற்கான காட்டிகளையும் இனங்கண்டு கொள்வதற்கு நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை | பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள் களினை இனஙகாணப்பட்டு அவ் இலக்குகளை அடைந்து கொள்ளப்பட வேண்டியமை. |

## 05. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சிரேஷ்ட மற்றும் இரண்டாம் தரத்திலான உததியோகத்தர்களின் 1,664 வெற்றிடங்கள் நிலவுவதன் காரணமாக முகாமைத்துவ தீர்மானங்கள் மேற்கொள்ளும் போதும் ஏனைய வெற்றிடங்கள் காரணமாகவும் அமைச்சின் செயற்பாடுகளிலும் முட்டுக்கட்டை ஏற்படுவதற்கும் வாய்ப்பினை இருந்ததாக அவதானிக்கப்பட்டது. | ஆசிரிய கல்வியியலாளர் சேவையில் மற்றும் கல்வி நிர்வாகச் சேவையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சேவைகளின் தேவைப்பாட்டினை கவனத்திற் கொண்டு வெற்றிடங்களை நிரப்பிக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |